අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/01/103/02/06

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2022.03.30

சுற்றுநிருப இல: 07/2022

அனைத்து: மாகாண பிரதம செயலாளர்கள்,
மாகாண கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டத்திற்குப் பொறுப்பான பி.க.ப்./உ. க. பணிப்பாளர்கள்,
இடைநிலைக் கல்வித் துறைசார் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் (SESIP) கண்காணிப்பு வேலைத்திட்டத்திற்கென தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் அதிபர்களுக்கும்.

**<u>இடைநிலைக் கல்வித் துறைசார் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் (SESIP) கீழ் இலக்காகக் கொண்ட பாடங்களின் அபிவிருத்திக்கென பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட மானியங்களை வழங்குதல்.</u>**

## 1.0 அறிமுகம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ், இடைநிலைக் கல்வியின் பண்புத்தரத்தை உயர்த்துவதற்காக இடைநிலைக் கல்வித் துறைசார் அபிவிருத்தி வேலைத்திட்டமானது (SESIP) தெரிவு செய்யப்பட்ட 750 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இவ் வேலைத்திட்டத்தின் கீழ் இலக்காகக் கொண்ட கீழ்க் குறிப்பிட்டுள்ள 13 பாடங்களின் அடைவு மட்டத்தினை உயர்த்துவதற்காக வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச் செயற்பாட்டினை வலுவூட்டும் நோக்குடன் தெரிவு செய்யப்பட்டுள்ள 750 பாடசாலைகளுக்கென பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மானியங்களை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அப் பாடசாலைகளில் சம்பந்தப்பட்ட பாடங்களைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு இம் மானியத்தை வழங்குவதற்கு கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலக்காக் கொள்ளப்பட்ட பாடங்கள் பின்வருமாறு அமையும்:

**<u>க.பொ.த. (சா. தர) பாடங்கள்.</u>**

- கணிதம்
- விஞ்ஞானம்

**<u>க.பொ.த. (உ. தர) பாடங்கள்.</u>**

- இரசாயனவியல்
- பௌதீகவியல்
- உயிரியல்
- இணைந்த கணிதம்
- பொறிமுறை தொழில்நுட்பவியல்
- உயிர் முறைமை தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்
- வணிகக் கல்வி
- கணக்கீடு
- பொருளியல்
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்

**2.0 நிதி மானியத்தைப் பயன்படுத்தக் கூடிய துறைகள்**

2.1 மேல் குறிப்பிடப்பட்ட பாடங்களுக்கென மாணவ மாணவியரை உள்ளீர்த்தல், அவர்களின் அடைவு மட்டத்தினை உயர்த்துதல், ஆசிரியர் அபிவிருத்தி மற்றும் பாடங்களை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டங்கள் என்பவற்றை பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கென இம் மானியத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

2.2 மேலும் இவ்வாறு இலக்காகக் கொள்ளப்பட்ட பாடங்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை இலகுவாக்கும் மகிந்தோதய ஆய்வுகூடம், கணித அறை, க.பொ.த. (சா.தர) மற்றும் க.பொ.த. (உ. தர) விஞ்ஞான ஆய்வுகூடங்கள், தொழில்நுட்பப் பீடங்கள் மற்றும் கணனி ஆய்வுகூடங்கள் போன்ற அலகுகளில் பயன்படுத்தப்படும் உபகரணங்களை நடாத்திச் செல்வதற்காகவும் சிறிய திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காகவும், தேவைப்படுமிடத்து இந்த மானியத்தின் 40% வரையில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

2.3 இந்த மானியத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்காக திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய அதேவேளை, 2.1 இல் குறிப்பிடப்பட்ட துறைகள் உள்வாங்கப்படும் வகையில் இலக்காகக் கொள்ளப்பட்ட அனைத்துப் பாடங்களுக்குமான வேலைத்திட்டங்கள்/ செயற்பாடுகள் இதில் உள்ளடக்கப்பட வேண்டும். இந்தத் திட்டத்திற்கான வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதி பெறப்பட வேண்டும்.

**3.0 நிதியைக் கையேற்றல்.**

இந்த மாணியமானது இறுதிக் கொடுப்பனவாக வழங்கப்படும் அதேவேளை, அது உங்கள் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்தி வங்கிக் கணக்கிற்கு வைப்பிலிடப்படும். பாடசாலை அதிபரால் அது தொடர்பாக 2018.06.22 ஆம் திகதிய 26/2018 சுற்றுநிருபத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக படிவமொன்றைப் பயன்படுத்தி தேசிய பாடசாலையெனின் அம் மானியம் கிடைக்கப்பெற்றதைக் குறிப்பிடப்பட்ட இணைப்புக் கடிதமொன்றுடன் "கணக்காளர்/ கொடுப்பனவு, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு கட்டாயமாக அனுப்புதல் வேண்டும். அவ் இணைப்புக் கடிதத்தினதும் ரசீதினதும் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதியொன்றினை கல்வி அமைச்சின் "கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)க்கும், கல்விப் பணிப்பாளர் (தேசிய பாடசாலைகள்)க்கும் அனுப்புவதற்கு ஆவன செய்ய வேண்டும். மாகாணப் பாடசாலையெனின் ரசீதினையும் இணைப்புக் கடிதத்தினையும் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணத்திற்குரிய தகவல் பட்டியலொன்றை கணக்காளர் (கொடுப்பனவு), கல்வி அமைச்சு எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**4.0 நிதியினை செலவு செய்தலும் கணக்கு வைத்தலும்.**

இம் மானியத்தை 2018.06.22 ஆந் திகதிய கல்வி அமைச்சின் சுற்றுநிருப இல. 26/2018 "பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்புரீதியான, அளவுரீதியான, கட்டமைப்புரீதியிலான அபிவிருத்திக்கான திட்டமிடல்கள் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கைந்நூல்" இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக செலவு செய்தல் மற்றும் கணக்கு வைத்தல் என்பனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு வழங்கப்படும் ஒதுக்கீடு 2022.10.30ம் திகதி ஆகும்போது செலவு செய்து முடிக்கப்பட்டிருக்க வேண்டிய அதேவேளை, எந்தளவு தொகையும் மீதமில்லாத வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

## 5.0 அறிக்கைப் படுத்துதல்

### 5.1 தேசிய பாடசாலைகள்

பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கையானது இதனுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 01 இன் படிவத்திற்கிணங்க அதிபரால் தயாரிக்கப்பட்டு "கல்விப் பணிப்பாளர், (தேசிய பாடசாலைகள்), கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு நான்கு மாதச் சுருக்கமாக சமர்ப்பிக்கப்பட வேண்டியதோடு, அதன் பிரதியொன்றினை கல்வி அமைச்சின் "கல்விப் பணிப்பாளர் (கண்காணிப்பு மற்றும் செயலாற்றுகை) மற்றும் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)" என்போருக்கும் அனுப்புதல் வேண்டும்.

### 5.2 மாகாணப் பாடசாலைகள்.

பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கையானது இணைப்பு 01 இன் படிவத்திற்கிணங்க அதிபரால் மாகாணக் கல்விப் பணிப்பபாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதோடு, அந்தந்த மாகாணங்களுக்குரிய ஒட்டு மொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கைகள் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் கல்வி அமைச்சின், கல்விப் பணிப்பாளர் (கண்காணிப்பு மற்றும் செயலாற்றுகை) மற்றும் கல்விப் பணிப்பாளர், (கல்வி அபிவிருத்தி) என்போருக்கு சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

## 6.0 **கண்காணிப்பும் கணக்காய்வும்.**

இம் மானியம் விளைதிறன்மிக்க வகையில் பயன்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்பாக கோட்டக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பபாளர், கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் (தேசிய பாடசாலைகள்), கல்விப் பணிப்பாளர் (கண்காணிப்பு மற்றும் செயலாற்றுகை) மற்றும் உரிய பாடத்துறைகளின் கல்விப் பணிப்பாளர்களால் (கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பக் கல்வி, விவசாயம் மற்றும் சுற்றாடல் கல்வி, வர்த்தகம் மற்றும் வணிகக் கல்வி) தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.

அவ்வாறே, ஒட்டுமொத்த வேலைத்திட்டத்தின் கண்காணிப்பினை கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் (கண்காணிப்பு மற்றும் செயலாற்றுகை) மேற்கொள்வார். அவ்வாறே, இவ் வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் அனைத்து செயற்பாடுகளும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும். எனவே, எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேறும் வகையில் செயலாற்றுமாறு மேலும் தெரிவிக்கிறேன்.

இச் சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டிகளை நடைமுறைப்படுத்துவதற்கு உரியதாக எழக் கூடிய ஏதேனும் பிரச்சினைகள் இருக்குமாயின் அவை தொடர்பான அனுமானங்கள் மற்றும் தீர்மானங்களை எடுத்தல் கல்வி அமைச்சின் செயலாளரைச் சார்ந்ததாகும்.

இச் சுற்றுநிருபம் 2022.04.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்..

பேராசிரியர் கே. கபில சீ. கே. பெரேரா.
செயலாளர்
கல்வி அமைச்சு.

பிரதிகள்:

1. கணக்காய்வாளர் நாயகம்.
2. அனைத்து மேலதிக செயலாளர்கள், கல்வி அமைச்சு.
3. பணிப்பாளர் நாயகம் (கணக்கு மற்றும் நிதி), கல்வி அமைச்சு.
4. அனைத்து கல்விப் பணிப்பாளர்கள்
5. தலைமை நிதி உத்தியோகத்தர், கல்வி அமைச்சு.
6. பிரதம கணக்காளர் (நிதி), கல்வி அமைச்சு.
7. பிரதம உள்ளக கணக்காய்வாளர், கல்வி அமைச்சு.
8. கணக்காளர் (பன்முகக் கணக்கு), கல்வி அமைச்சு.
9. கணக்காளர் (கொடுப்பனவு), கல்வி அமைச்சு.

இணைப்பு 01

# இடைநிலைக் கல்வித் துறைசார் அபிவிருத்தி வேலைத்திட்டம் (SESIP)
## கல்வி அமைச்சு

### பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட மானியம்
### பாடசாலை மட்ட பௌதிக மற்றும் நிதி முன்னேற்றப் போக்கினை அறிக்கைப்படுத்தல்

பாடசாலையின் பெயர் ........................................................................................................

| இ.க.து.அ.வே. கீழ் வழங்கப்படும் தொகை (ரூ.) | வழங்கப்பட்ட திகதி | மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டம்/ செயற்றிட்டங்கள்/ வேலைத்திட்டம் | செலவாகிய ஒதுக்கீடு (ரூ.) | 2022......திகதியில் பௌதிக முன்னேற்றப் போக்கு | 2022.......திகதியில் நிதி முன்னேற்றப் போக்கு | வேறு குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

மேற்குறிப்பிட்ட விபரங்களும் தகவல்களும் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

கையொப்பம் - ........................................................................

அதிபர் பெயர் - ........................................................................

திகதி - ........................................................................

பிரதிகள் -
- மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம்
- வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விக் காரியாலயம்